# ஆறுமுகநாவலரின் அறிவியல் சிந்தனை

**பேராசிரியர் செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்,**
தமிழ்த்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.

ஆய்வுச் சுருக்கம்

அறிவியல் என்பது இயற்கையை நோக்கி, அடிப்படையான பகுத்தறிவு நோக்கிலான அறிவு பெறும் முறையையும், அம்முறையில் பெறப்பட்ட அறிவையும், உள்ளியக்கத்தைப் புரிந்து கொள்ளுதலையும் குறிக்கிறது. ஈழத்தில், பத்தொன்பதாம் நூற்றாண்டில் சமய, தமிழ்க் கல்வியின் வாயிலாக அறிவியல் ரீதியான சிந்தனைகளை மாணவர்களுக்குப் போதித்தவர் நாவலர். சமயம், தமிழ் என்பவற்றுக்கு அப்பால் புவியியல், கணிதம், விஞ்ஞானம், பூகோளம், விவசாயம், உயிரியல் பல்வகைமை முதலிய கற்கைநெறிகளையும் தன் நூல்களின் மூலம் பதிவுசெய்துள்ளார். இவரது படைப்புக்களினூடாக இவரது அறிவியல் பார்வையினை மதிப்பீடு செய்யும் முயற்சிகள் தெளிவாகப் பார்க்கப்படாத நிலையில் இவரது அறிவியற் சிந்தனைகளை மதிப்பீடு செய்யும் நொக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வானது பண்புசார் முறைமையைக் கொண்டமைந்துள்ளதுடன், விபரணப் பகுப்பாய்வு முறை, திறனாய்வு முதலிய அணுகுமுறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்விற்கு நாவலரின் இலக்கியப் படைப்புக்கள் முதன்மைத் தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், ஆய்வுத்தலைப்புடன் தொடர்புடைய கட்டுரை நூல்கள், இதழ்கள் போன்றவை துணைநிலைத் தரவுகளாகப் பயன் படுத்தப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்:** நாவலர், படைப்புக்கள், அறிவியல், நோக்கு

## அறிமுகம்

ஈழத்தில் புதிய இலக்கிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர் ஆறுமுகநாவலர். மரபுவழிப் பண்பாட்டினைப் பேணும் அதேவேளை மேல் நாட்டவரின் நல்ல அம்சங்களை உள்வாங்கிக்கொண்டு, நவீன மயமாக்கல் செயற்பாட்டினைச் செயற்படுத்தியவர். இவர் ஒரு அறிவியல் சிந்தனையாளர் என்ற பெயருக்குப் பொருத்தமாக, விஞ்ஞான ரீதியான பல்வேறுபட்ட விடயங்களைத் தன் படைப்பிலக்கியங்களில் தீர்க்கதரிசனத்துடன் அணுகியுள்ளார். சமயம், தமிழ் என்பவற்றுக்கு அப்பால் புவியியல், கணிதம், விஞ்ஞானம், பூகோளம், விவசாயம், உயிரியல் பல்வகைமை முதலிய கற்கைநெறிகளைத் தன் "பாலபாடங்களின்" மூலம் பதிவுசெய்துள்ளார். நாவலருடைய காலப்பின்னணியைக் கருத்திற்கொண்டே அவரையும்,

அவரின் அறிவியல் நோக்கினையும் நாம் மதிப்பீடு செய்ய முயல வேண்டும். நாவலர் வாழ்ந்த சூழல்தான் அவருக்குக் கல்விக்கோட்பாடுகளை வரையறுக்கக் காரணமாயிற்று. அவருடைய காலம் நிலவுடைமைச் சமுதாயம் நிலவிய காலப்பகுதியாகும். கமத்தொழிலே முதன்மை பெற்றிருந்தது. பெருவணிகமோ, இயந்திரத்தொழில்களோ பெரும் வளர்ச்சியை எட்டவில்லை. மாற்றங்கள் சிறிது சிறிதாகவே இடம்பெறலாயிற்று. எனவே அக்காலச்சூழலுக்கேற்ப சமயப் பண்பாட்டு மரபுகளைப் பரப்புவதையும், பேணுவதையும் நோக்காகக்கொண்டு செயற்பட்ட வேளை, அறிவியற் சிந்தனைகளும் அவரின் படைப்பிலக்கியங்களுக்குள்ளால் வெளிப்படுத்தப்பட்டன. இதனையே,

"மேற்கே மெத்த வளரும் சமூக, அறிவுத்துறையின் வழிநின்று ஆராய்ந்து, அவரது இயக்கத்தின் தோற்றம், வளர்ச்சி, வியாப்தி, நிலைபேறு ஆகியவற்றுக்கான அத்தியாவசிய ஊணாகும், அத்தகைய ஆய்வு ஆறுமுகநாவலராய்வின் புதிய பரிமாணங்களை ஏற்படுத்தும்" *(சிவத்தம்பி.க, 1979: ப.36)* என்று கா. சிவத்தம்பி கூறியமை இவ்விடத்தில் நோக்கத்தக்கது. நாவலரைப் பல கோணங்களில் ஆய்வாளர்கள் ஆய்வுசெய்து வந்துள்ளார்கள். தொழிநுட்பம் சார்ந்த ஆராய்ச்சி வலுவடைந்த வேளையில், புதிய நோக்கில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவது இயல்பானதாகும். நாவலர் அவர்கள் தாம் பெற்ற நூலறிவையும், சாத்திர அறிவையும் பயன்படுத்தி மக்களுக்கு அறிவியற் சிந்தனைகளைப் போதிக்க முன்வந்தவர். பாலர் பாடங்களில் இவர் குறிப்பிட்ட பல விடயங்கள் வளர்ந்தோர்க்குரிய முதிர்ச்சி மிக்கவையாகவும், உயர் கல்வி கற்கும் மாணவர்களுக்குரியதாகவும், பாலர் வயதினருக்குரியவையாகவும் காணப்படுகின்றன. நாவலர் சிறுவராக வாழும் பொழுது நீதி நூல்களையும், நிகண்டுகளையும் கற்றுத் தமிழ் அறிவை வளர்த்துக்கொண்டார். ஆங்கிலப் பாடசாலையில் சேர்ந்து பார்சிவல் பாதிரியிடம் ஆங்கிலக் கல்வியைக் கற்றவர். இதனால் ஆங்கிலம், தமிழ், வடமொழி முதலிய பலமொழிப்புலமை வாய்க்கப்பெற்றார். மொழியறிவினால் பல சாதனைகளைப் புரிய நேர்ந்தது. இவர் மூலநூல்களுக்கு எழுதிய உரைகள், அவரால் ஆக்கப்பட்ட நூல்கள், பதிப்பிக்கப்பட்ட நூல்கள், இலக்கண நூல்கள், மொழிபெயர்ப்பு என்ற நோக்கில் இவரது பணிகள் கவனிக்கப்பட வேண்டியவை. சமயப்பணி, சமூகப்பணி, தமிழ்ப்பணி என்றெல்லாம் இவரது செயற்பாடுகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. தொழிநுட்பம் வளர்ச்சி யடைந்த இக்காலத்தில் அறிவியல் பற்றி நோக்குவது புதிதல்ல. ஆனால் இவரது படைப்புக்களினூடாக இவரது அறிவியல் பார்வையினை மதிப்பீடு செய்யும் முயற்சி கள் தெளிவாகப் பார்க்கப்படாத நிலை இருக்கின்றது. இதனைக் கருத்திற்கொண்டே இவரது அறிவியற் சிந்தனைகளை மதிப்பீடு செய்ய இவ்வாய்வு முயற்சிக்கிறது.

அறிவியல்

அறிவியல் என்பது இயற்கையை நோக்கி, அடிப்படையான பகுத்தறிவு நோக்கிலான அறிவு பெறும் முறையையும், அம்முறையில் பெறப்பட்ட அறிவையும், உள்ளியக்கத்தைப் புரிந்துகொள்ளுதலையும் குறிக்கிறது. ஒன்றைப் பற்றிய ஒரு கருதுகோளை முன்வைத்து, நேர்பட நிகழ்வுகளைத் துல்லியமாய்ப் பார்த்து,

தரவுகளைப் பெற்று, பரிசோதனை, முடிவுகளைக் கண்டுபிடித்து நிறுவுவதே அறிவியல் வழிமுறை. இதன் அடிப்படையில் ஒன்றைப் பற்றிய ஒரு பொதுக் கோட்பாடு உருவாக்கப்படும். கோட்பாடுகள் இயற்கையின் இயக்கப்பாடுகளை நன்குணரவழி வகுக்கின்றன. அறிவியல் என்ற சொல், அறிவு என்ற அடிச்சொல்லுடன் இயல் என்ற பதம் இணைந்து உருவாக்கம் பெற்றுள்ளது. அறிவு என்பதற்கு, மதுரைத் தமிழ்ப் பேரகராதி "அறிதல், உணர்வு, கல்வி, புத்தி, போதனை ஞானம், மதி ஞாபகம்" எனப் பல பொருள் கூறுகின்றது. (மதுரைத் தமிழ்ப் பேரகராதி, 1956 : ப.172). பெருஞ் சொல்லகராதியானது, "அறிவியலென்பது பகுத்தறிவினாலும், சோதனையினாலும் இயற்கையில் அடங்கியுள்ள உண்மைகளைக் காணும் கல்வி" என்று விளக்கம் தருகின்றது. (பெருஞ்சொல்லகராதி, தொகுதி ஒன்று, ப.500). க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, "உலகில் இருப்பவற்றின் இயற்கை நியதிகளைக் கவனித்தும், சோதித்தும், நிரூபித்தும் பெறும் அறிவு விஞ்ஞானம்" என்கிறது. (க்ரியாவின் தற்காலத்தமிழ் அகராதி, 1992: ப.58).

ஆரம்பத்தில் "Science" என்ற ஆங்கிலச்சொல்லிற்கு "அறிவியல்" என்று தமிழில் பொருள் வழங்கினார்கள். இங்கு அறிவியல் என்பது விஞ்ஞானத்தைக் குறிப்பதாக அமைந்தது. ஆனால் காலப்போக்கில் அதனைக்கடந்து "அறிவியல்" என்ற சொல்லின் பொருள், விரிவடைந்துவிட்டது. இன்று சமூகம், அரசியல் தொடர்பான பயில் நெறிகளும் அறிவியல் என்ற சொல்லுடன் சேர்த்து சமூக அறிவியல், அரச அறிவியல் எனப் பெயர் பெற்றிருப்பது அவதானத்திற்குரியது. தொழில் நுட்பம், ஆராய்ச்சி என்பன வலுவடைந்ததனால் அவற்றைப் பிரித்து நோக்கும் தன்மை வலுப்பெற்றுவிட்டன. இதனால் இன்று எல்லாக் கற்கை நெறிகளுமே அறிவியல் நோக்கில்தான் பார்க்கப்படுகின்றன.

### காலப்பின்னணி

இலங்கையில் பிரித்தானியர் ஆட்சி நிலைபெற்ற காலகட்டத்தினைக் காலனித்துவக்காலம் என்பர். 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் (1822-1879) ஆறுமுகநாவலர் வாழ்ந்தார். இதனால் பிரித்தானியரின் காலனித்துவச் செயற்பாடுகள் வேரூன்றியிருந்த வேளையில் நாவலரின் செயற்பாடுகள் மேல்நிலையடைந்தன. இவரின் செயற்பாடுகளுக்குரிய கருத்தியல் தளமாகச் சைவமும், தமிழும் விளங்கின. பிரித்தானியர்களது அரசியல் முறைமை, கல்வி முறைமை, பண்பாட்டுக் கோலங்களால் தமிழர்களது சைவசமயமும், தமிழ் இலக்கிய, இலக்கணச் செழுமையும் அழிந்து விடாமல், பாதுகாப்புச் செய்வது நாவலரது பணியாகவிருந்தது. இவர் காலனித்துவ ஆட்சியின் கருத்தியல்களில் முரண்பாடுமிக்கவற்றை எதிர்த்தும், அவற்றின் நவீன மயமாக்கலை உள்வாங்கியும் செயற்பட்டார். காலனித்துவ ஆட்சியாளரின் கருத்தியலை உற்று நோக்கி, அந்த நவீனத்துவத்தைத் தான் உள்வாங்கிக்கொண்டு, அவற்றின்மூலம் சைவத்தையும், தமிழையும் நிலைநிறுத்த முயற்சித்தவர். பிரசங்கமுறை, பாடப்புத்தக உருவாக்கம், பாடத்திட்டம், பாடசாலை முறைமை, வினாவிடை நூலாக்கம், சைவ, ஆங்கிலப் பாடசாலை உருவாக்கம் முதலியவற்றின்மூலம் நவீனத்துவ முறைமையைக் கையாண்டார். திண்ணைப்

பள்ளிக்கூட முறைமையை மாற்றி நவீனப் பாடசாலை முறையை நோக்கி முன்நகர்த்தியவர். இவரது காலத்தவர்களாக, மோ. காந்தி, கால்டுவெல் பாதிரியார், கிறீன். எஸ், குமாரசுவாமி முதலியார், சபாபதி முதலியார், சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்சர், தாகூர் ரவீந்திரநாத், மோகன்ராஜ் ராஜாராம் முதலியவர்களைக் குறிப்பிடலாம்.

"பத்தொன்பதாம் நூற்றாண்டிலே தமிழ்ச் சமூகத்திற்கு அவசியமாயிருந்த சிற்சில கருமங்களை நிறைவேற்றியவர். நன்கு ஆற்றப்பட்ட அக்கருமங்கள் பிறருக்கு ஆதர்சனமாக இருந்தன. அவையே புதுப்பாதையைகாட்டும் புதுப்பணிகளாகவும் அமைந்தன" என்று ஆறுமுகநாவலரின் பணிகளைப் பேராசிரியர் கைலாசபதியவர்கள் விதந்து குறிப்பிட்டமையும் நோக்கத்தக்கது. (கைலாசபதி.க, *1979: ப.19*). நாவலரின் நவீன சிந்தனையைப் பேராசிரியர் அ. சண்முகதாஸ் பின்வருமாறு குறிப்பிடுவார். "இலக்கணங்களை நுண்ணாய்வு அடிப்படை நோக்கியே தன் பணியிலீடுபட்டார். அதனால் அவருடைய இலக்கண அமைப்பிற் சில பண்புகளை இக்கால மொழியியற் கோட்பாடுகள் சிலவற்றின் மூலம் நியாயப்படுத்தக்கூடியதாயமைந்தன. ஆனால் மரபுவழி இலக்கணக்கோட்பாடுகளைப் பொன்னேபோற் போற்றியுள்ளார்" என்று கூறியமை மரபையும், நவீனத்தையும் போற்றியதைக் காட்டுகின்றது. (சண்முகதாஸ்.அ, *1979: ப.33*).

பூமி

தொல்காப்பியர், தன்னுடைய தொல்காப்பிய இலக்கணத்திலே பூமி பற்றிய கருத்தியல்களைப் பதிவுசெய்திருப்பது அவதானத்திற்குரியதொன்றாகும்.

"நிலந் தீ நீர் வளி விசும்பொடு

கலந்த மயக்கம் மூலகம்" (தொல். பொருள்: 135)

இத்தகைய பழந்தமிழிலக்கணத்தில் கூறப்பட்ட பூமி பற்றிய கருத்தியல்கள், ஆறுமுகநாவலரின் சிந்தனைகளிலும் மேலிட்டுள்ளன. இதனாலேயேதான் பூகோளம் சார்ந்த சிந்தனைகளை, அறிவியல் நோக்குடன் தன் படைப்புக்களின்மூலம் பதிவுசெய்ய வேண்டியதாயிற்று. இவர் பூகோள நூல், அங்க கணிதம், வீச கணிதம், ஷேத்திர கணிதம் முதலிய அறிவுசார்ந்த நூல்களை எல்லோரும் கற்க வேண்டும் என்ற சிந்தனையை உடையவர். இதனால் அது சார்ந்த கருத்துக்களுக்கும் முக்கியத்துவம் வழங்கினார். "நாம் வாசஞ் செய்கின்ற பூமி, மிகவும் பெரியதாகவும் அளவிறந்த பொருள்களை உடையதாகவும் இருக்கின்றது. இதில் சிலபாகம் நீரும், சிலபாகம் நிலமுமாய் இருக்கின்றன. நிலத்தில் உயர்ந்த மலைகளும், மண்மேடுகளும், தாழ்ந்த பள்ளங்களும், சம நிலங்களும் இருக்கின்றன. நிலத்திலே மரம், செடி, கொடிகள், புல், பூண்டுகள் செழித்து வளர்வதனாலேயேதான் பூமி மிகவும் சிறப்பானதாகத் தோன்றுகின்றன. உவர்நீர் ஒன்றாகச் சேர்ந்து பரந்த நிலத்தைச் சூழ்ந்திருக்கின்றது. இது பரவை, சமுத்திரம் என்று சொல்லப்படும். குடிப்பதற்கும், ஸ்நானஞ் செய்வதற்கும் தகுதியான நல்ல சலம், ஆறு, குளம், கிணறு என்றும் இவைகளில் உண்டு" என்று பூகோளத்தில் காணப்படும் நிலத்தோற்றவுறுப்புக்களைப் பற்றியும், அங்கு இருக்கும்

உயிர்ப்பல்வகைமை பற்றியும் தன் சிந்தனாபூர்வக் கருத்துக்களை ஆறுமுகநாவலர் பதிவுசெய்திருப்பது சிறப்புக்குரியது. கடலியல், நிலவியல், நீரியல் பற்றிய சிந்தனை களானவை, ஒரு நாட்டின் அறிவியல் துறையின் வளர்ச்சிக்கு அடையாளமானவை என்பதனையே இதன்மூலம் வலியுறுத்தியுள்ளார் எனலாம். (பாலபாடம், இரண்டாம் புத்தகம், பக். 40 - 41).

கவிஞர் வைரமுத்து "தண்ணீர் தேசம்" என்ற அறிவியல் சார்ந்த கவிதையிலான நாவலொன்றைப் படைத்துள்ளார். இது இலக்கியமும், அறிவியலும் கலந்த புனைகதைப்படைப்பாகும். ஒரு நாட்டின் வளத்திற்கு அடிப்படையாக அமைவது நீரவளம். "தேசிய நதி நீர்க் கொள்கை"யை முறைப்படி நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்களை இன்றைய அரசு நடைமுறைப்படுத்துவதனை அவதானிக்கிறோம். இதனாலேயேதான் "தேசிய நதி நீர்க் கொள்கை"யின் தேவையை உணர்ந்திருந்த பாரதி,

"வங்கத்திலோடி வரும் நீரின் மிகையால்

மையத்து நாடுகளில் பயில் செய்குவோம்" என்று கவிதை புனைந்துள்ளார். இன்றைய இலங்கையின் கடல்வணிகத்தில் திருகோணமலை, கொழும்புத் துறைமுகத்தின் பங்கு கணிசமாக இருப்பதை அறிகிறோம். இத்தகைய நாட்டில் வாழ்ந்த ஆறுமுக நாவலரும், பூமியின் நீர் வளம், நில வளம் பற்றிய அறிவியல் சிந்தனைகளை அன்றே வெளிப்படுத்தித் தன் அறிவியல் நோக்கினை நிலைப்படுத்தியுள்ளார். கனிமங்களும், உலோகங்களும், மரம், செடி, கொடிகளும், பயிர் வகைகளும், கடல் மற்றும் கடல் வாழ் உயிரினங்களும், ஆறுகள், கிணறுகள், ஊற்றுக்கள் எல்லாம் பூமியில்தான் நிலைபெற்றிருக்கின்றன. அதுமட்டுமன்றி பூமியைத்தான் நிலைப்பிட மாகவும் கொண்டுள்ளன. இதனாலேயேதான் பூமியை முன்னோர் பூமித்தாய், பூமாதேவி என்று அழைக்கத்தலைப்பட்டனர்.

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை

இகழ்வாரைப் பொறுத்தல் தலை" என்ற வள்ளுவப்பெருந்தகையின் வாக்கும் இங்கு அவதானத்திற்குரியதாகவே காணப்படுகின்றது.

ஆறுமுகநாவலர் பூமிசாஸ்திரப் பாடத்தை பயன்தரக்கூடிய வழியிற் கற்பிப்பதற்கான வழிமுறைகளைக கூறியுள்ளார். பூமிசாஸ்திர சம்பந்தமான படங்களை அவதானித்து, அவற்றில் உள்ளனவற்றை அனுமானித்துக் கற்றல் வேண்டும் என்கிறார். பூகோள உருண்டையை வரைந்து கற்பித்தல் வேண்டும். பூமிசாஸ்திரப் பாட உபகரணங்களுள் தேசப்படங்கள் முக்கியமானவை. ஒவ்வொரு பாடசாலைகளிலும், கிராமப்படம், மாகாணப்படம், இலங்கைப்படம், இந்தியப்படம், உலகப்படம் ஆகியவற்றைக் காண்பித்து கற்பிப்பது அவசியமாகும். மலைகள், பள்ளத்தாக்குகள், ஏரிகள், துறைமுகங்கள் முதலான விடயங்களைக் கற்பிக்க மாதிரி உருவங்கள் மிகவும் அவசியமானவை எனவும் குறிப்பிடுகின்றார். புள்ளிவிபரமுறைப்படி புயல், பூகம்பம், நிலநடுக்கம் போன்றவற்றை கற்பிக்கலாம் என பூமிசாஸ்திரத்தில் ஆலோசனை கூறுகின்றார்.

சரித்திர ஆராய்ச்சிக்கு ஆதாரமாக உள்ள இடப்பெயர்கள், தெருப்பெயர்கள், ஆட்பெயர்கள் ஆகிய இவைகளைக் குறிப்பிட்டு அவற்றின் சரித்திரங்களை அறிய

வேண்டும் எனக் கூறுகின்றார். உதாரணமாக கீரிமலை, மாவிட்டபுரம், தொண்டைமானாறு போன்ற சரித்திரங்கள்.

### நட்சத்திரம் மற்றும் கோள்கள்

ஒன்பது கிரகங்கள், இருபத்தேழு நட்சத்திரங்கள், நான்கு யுகங்கள், அறுபது வருடங்கள் என்ற பழந்தமிழரின் அறிவியற் செய்திகளைப் பாகுபடுத்தி வகைப்படுத்தும் அறிவினை நாவலர் கையாண்டிருப்பது, அவரின் அறிவியல்நோக்கின் மற்றுமொரு கிளையாகும். கிரகங்களைச் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது எனப் பாகுபடுத்தியுள்ளார். ஏழு கோள்களின் பெயரால் ஏழு கிழமைகளின் பெயர்களை முன்னோர் வகுத்துள்ளனர். தமிழர்கள் வானியற் கலைகளில் சிறந்து விளங்கியள்ளமையையே இது எமக்குக் காட்டுகின்றது.

"வான்கண் விழியா வைகறை யாமத்து

மீன்திகழ் விசும்பின் வெண்மதி நீங்கக்

காரிருள் நின்ற கடைநாட்.." (சிலம்பு, 10 : 1 - 3) என்ற பாடலில், வளர்பிறை நாட்களில் ஞாயிறு எழுவதற்கு முன்னர் திங்கள் சென்று மறைந்துவிடும் என்ற செய்தியையும் சிலப்பதிகாரம் எமக்குக் காட்டுகின்றது. இவ்வாறான வானியல் அறிவுசார்ந்த சிந்தனாபூர்வக்கருத்துக்களைப் பழந்தமிழிலக்கியங்கள் வாயிலாக ஆறுமுகநாவலர் அறிந்து, காலத்தேவையின் பொருட்டுத் தன் படைப்பிலக்கியங்களினூடாக மக்களுக்குப் பாடம்புகட்டியுள்ளார் என்றே சொல்லத் தோன்றுகின்றது.

### காற்று

பூமியில் உயிர்கள் நிலைப்பதற்கு இன்றிமையாத ஒன்றாகக் காணப்படுவது வளி. அது கண்ணுக்குப் புலனாகாதது. எங்கும் பரந்திருக்கும். அதைப் பரிசத்தால் உணரலாம். இத்தகைய காற்றின் இயல்பினை அறிந்து ஆறுமுகநாவலர், காற்றின் வகைகளைப் பாகுபடுத்துகின்றார். மெல்ல வீசினால் "இளங்காற்று" என்றும், பலமாக வீசினால் "கடுங்காற்று" என்றும் பெயரிடுகின்றார். நிலத்திலிருந்து சுழன்று கொண்டு மேலே எழும்புங்காற்றுக்குச் சுழல்காற்று" அல்லது "சூளைக்காற்று" என்கிறார். காற்று, வீசும் திக்குக்களின் போக்குகளிலிருந்தும் அவற்றினை வகைப்படுத்திக் காட்டியுள்ளார்.

வாடை, தென்றல், கொண்டல், கோடை என்னும் நான்கு காற்றின் வகையினுள்ளும், தென்றல் காற்றே உடம்புக்கு மிகுந்த ஆரோக்கியத்தைத் தருகிறதென்கிறார். அது சித்திரை, வைகாசி மாதங்களில் வீசுகின்றது. "வாதம்" முதலிய நோய்களை நீக்கும் இயல்பு கடற்காற்றுக்குண்டு என்கிறார். ஆதலால் கடற்காற்றுப்படும்படி சிறிது நேரம் உலாவுவது உடம்புக்குச் சுகத்தைக் கொடுக்கும் என்கிறார். பெரும் காற்றில் உலாவுவது நன்றன்று. நல்ல காற்று இல்லாமல் அடைபட்டு இருக்கிற அறையில் இருந்தால் நோய் உண்டாகும். அதனால் நல்ல காற்று உள்ள இடத்தில் நித்திரை செய்தல் வேண்டும் (பாலபாடம், ப.42) என்று காற்றினால் உண்டாகும் பயன்களை அறிவியல் பார்வையுடன் பாலபாடத்தில் பதிவுசெய்திருக்கிறார் ஆறுமுகநாவலர்.

## தாவரங்கள்

தாவரங்களைப் பற்றிய விஞ்ஞானபூர்வமான கற்கை "தாவரவியல்" எனப்படும். "தாவர உயிரியல்" அல்லது "தாவர அறிவியல்" எனவும் வழங்குவர். நாவலரும் தாவரங்கள் பற்றிய அறிவியல் சிந்தனைகளைத் தன்னுடைய பால பாடத்தில் குறிப்பிடு கின்றார். பூமியில் இருக்கும் விருட்சங்களும், கொடிகளும், செடிகளும், புற்களும் தாவர உயிரியலுக்குள் உள்ளடக்கம். இவை பரிசத்தை மாத்திரம் அறியும் ஓருயிர்கள். இத்தகைய ஓரறிவுள்ள தாவரங்களை வகைப்படுத்தி அவற்றின் பயன்பாடு பற்றி நாவலர் குறிப்பிடுகின்றார்.

"உணவுக்குரிய காய், கனி, கிழங்கு முதலியவைகளையும், மரங்களின் நிழலையும், நல்ல காற்றையும் தருகின்ற விருட்சங்கள் வீடு கட்டுவதற்கும், மரக்கலம், வண்டி, பெட்டி, நாற்காலி முதலியன செய்தற்கும் உதவுகின்றன. தாவரங்களின் பசுமையான இலைகள் கண்களுக்கு குளிர்ச்சியைக் கொடுக்கின்றன. தாவரங்கள் இல்லையானால் உயிர்கள் பிழைத்திருத்தல் அருமை" (பாலபாடம், 3ஆம் புத்தகம், ப.116) என்ற கருத்தினைப் பாலபாடத்தில் நாவலர் பதிவு செய்திருப்பது தாவர உயிர்கள் பற்றிய அவரின் கருத்தியல்களை எமக்குக் காட்டுகின்றது.

உடலில் உண்டாகும் வியாதிகளைத் தீர்க்கும் மருந்துகளாகவும் இவை பயன்படுகின்றன என்கிறார். தேக்கு, பாலை, முதிரை, தென்னை, பனை, பாலை முதலிய மரங்களின்மூலம் மனிதர்கள் வீடு கட்டிக்கொள்கிறார்கள். தென்னையோலை, பனையோலைகளால் வீடு வேயப்படுகின்றது. பனையோலைச் சுவடிகள் எழுதப்பயன்படுகின்றன. கூடை, கடகம் முதலியன செய்யவும் ஓலைகள் உதவுகின்றன. யாழ்ப்பாணத்துப் பனைமரம் போல் வைரமுள்ள பனைமரம் வேறு எங்கும் கிடைக்காது என்கிறார். தேங்காய் எண்ணெயும், கயிறும் மக்களுக்கு மிக உபயோகமானவை. இவை இரண்டும் மலையாளத்திலும், இலங்கையிலிருந்தும் பல இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது என்கிறார். பருத்தியிலிருந்து வஸ்திரம் செய்யப்படுகின்றது. அது குளிர், வெய்யில் முதலியவற்றினால் நோய்கள் வராதபடி தேக சுகத்தைக் கொடுக்கின்றது. மனிதனுடைய பிரதான உணவு வகைகள் தாவரங்களிடம் இருந்து பெறப்படுபவையாகும். பனையின் பயன்பாடு பற்றியும் தென்னையின் பயன்பாடு பற்றியும் மிகவும் விரிவாகவே நாவலர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இன்றும் பனை அபிவிருத்தி, ஆராய்ச்சி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளமை அவதானத்துக்குரியதாகும். இன்று காடுகள் அழிக்கப்படுவது, மரங்கள் வெட்டப்படுவது பற்றிப் பல விவாதங்கள் நடைபெறுகின்றன. சூழலியல் பற்றிப் பலர் பலவாறு பேசிவருவதும் முக்கியமானது. நாம் மரம், செடி, கொடிகளோடு அன்பாகப் பேசிவரும்போது, அவை நன்றாகச் செழித்து வருவதாக இன்றைய விஞ்ஞானம் கூறுகின்றது. ஞானிகளும், சித்தர்களும் அதனையே சொல்லியிருக்கின்றார்கள். தொல்காப்பியரும் தாவரங்களுக்கு ஓர் உயிர் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். தாவர உடற்கூற்றியல், தாவர உயிரணுக்கள், இழையங்களின் கட்டமைப்புப் பற்றித் தாவரவியலாளர்கள் இன்று ஆய்வு செய்கிறார்கள். நாவலரவர்களும் இவ்வறிவியலை நன்கு அறிந்து, தாவரங்களின் வகைப்பாடு பற்றியும், அவற்றின் பயன்பாடு பற்றியும், அவற்றினைப் பேணவேண்டியதன் அவசியத்தையும்

தன்படைப்புக்களினூடாகப் பேசியுள்ளார்.

### மிருகங்கள்

விலங்குகள் பற்றிய ஆய்வாக "விலங்கியல்" அமைகின்றது. விலங்குகளாவன புலி, யானை, ஒட்டகம், கரடி, குதிரை, ஆடு, மாடு, எருமை, மான் முதலியவையாம். மிருகங்களுக்கு விலங்குகள் என்று பெயர். மிருகங்களைக் காட்டு மிருகங்கள், நாட்டு மிருகங்கள் என நாவலர் பாகுபடுத்துகின்றார். நாட்டுமிருகங்கள் தாவர உணவினை உண்பதாகவும், சாதுவான குணம் உடையனவாகவும் இருக்குமென அவற்றின் இயல் பினை விளக்குகின்றார். காட்டு மிருகங்கள் மாமிச உணவினை உண்பனவாகவும், கொடுந்தன்மையுடையனவாகவும் இருக்கும் என்று அவற்றின் இயல்புகளைக் கூறுகின்றார்.

குதிரை அரசர்களுக்குரிய நால்வகைச் சேனைகளுள் ஒன்று. அது அழகினா லும், எசமானுடைய எண்ணத்தினை அறியும் அறிவினாலும், வேகத்தினாலும் சிறந்தது. குதிரைகள் வண்டி இழுப்பதற்கும் பொருட்களை ஏற்றி இறக்கவும் உதவுகின்றன என்கிறார். இயற்கையோடு வாழ்ந்து மகிழவேண்டிய மனிதர்கள் இன்று விலங்குகளை வேட்டையாடுகின்றனர். அதனால் விலங்குகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டு வருகின்றன. சில விலங்குகள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன என்றும் பதிவுசெய்கிறார். 1970ஆம் ஆண்டு முதல் 60 சதவீதமான விலங்குகள் அழிக்கப்பட்டுள்ளமையை விஞ்ஞானிகள் எடுத்துக்கூறி எச்சரிக்கை விடுத்து, நாகரிகத்தை அச்சறுத்தும் அவசரநிலை ஏற்பட்டுள்ளது என்கின்றனர். இதன் பொருட்டே அக்காலச் சூழலுக்கேற்ப, விலங்குகள் பற்றிய அறிவியல் பூர்வமான செய்திகளை மாணவர்களுக்குக் கற்பிக்கிறார் நாவலர்.

### வேளாண்மை

வேளாண்மை செய்தல் என்பது அறிவியல் சார்ந்தது. நெல், வாழை, கரும்பு, தென்னை, கோப்பி, தேயிலை, புகையிலை, பருத்தி முதலானவற்றைப் பயிரிட வேண்டியதன் அவசியத்தினை வலியுறுத்துகின்றார். வேளான்மைத் தொழிலின்மீது திறமையில்லாதவர்கள், நெற்செய்கையினை அதிக நிலத்தில் செய்கை பண்ணினால் மிகுந்த சிரமத்தை உண்டாக்குவதுடன், வரவு குறைவாகவும், செலவு கூடுதலாகவும் வரும் என்ற அறிவை விதைக்கிறார். அரச பாடங்களில் பயிர்த்தொழிலைக் கற்பிக்க வேண்டும் என அறிவுறுத்துகிறார். கிணற்றிலிருந்து நீர் இறைத்துப் பயிரிடுவதில் யாழ்ப்பாணத்தவர்கள் சிறந்தவர்களென்று யாழ்ப்பாணத்துப் பயிர்ச்செய்கையை விதந்து பேசுகிறார். இன்றைய நவீன யுகத்தில் பல இயந்திரப் பயன்பாட்டின்மூலம் கிணறுகள் இறைக்கப்படுகின்றன. மேலும், தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்ததால் இயந்திரங்கள்மூலம் பயிர் அறுவடை செய்யப்படுகின்றதைக் காணலாம். கல்லூரிகள் பல்கலைக்கழகங்களில் வேளாண்மை, விவசாயம் கற்பிக்கப்பட்டு ஆய்வு செய்யப்படுகின்றமையும் முக்கியமானதாகும்.

**காலம்**

காலத்தின் பயன்பாடு பற்றி நாவலர் பல அறிவியற் சிந்தனைகளைப் பதிவுசெய்துள்ளார். நாம் செய்யுந் தொழில்களெல்லாம், அது அது முற்றுப்பெற வேண்டிய அளவில் முற்றுப் பெறுதற்பொருட்டாகக், காலம் அருவமாயிருப்பினும் அது நமக்கு உபயோகமாயிருக்கிறது. காலத்தை வரையறை செய்துகொள்வதற்காகக் கடவுளாற் கொடுக்கப்பட்ட கருவிகள் சூரியன் சந்திரன் முதலாகிய கிரகங்களாகும். அவற்றை ஆதாரமாகக்கொண்டு காலவரையறை செய்யப்படுகின்றது. காலத்தைக் காட்டும் கருவிகள், கடிகாரங்கள் வைத்திருப்பது தொழில்முயற்சிக்கும், சுறுசுறுப்புக்கும் ஏதுவாயிருக்கும் என்கிறார் நாவலர். பழைய காலத்தில் தமிழர்கள் காலத்தை நிமிடம், கலை, நாழிகை, முகூர்த்தம் எனப் பெயரிட்டனர். ஆங்கிலேயர்கள் காலத்தைச் செக்கண்ட், மினிட், மணி எனப் பெயரிட்டனர். ஐன்ஸ்டின் என்ற அறிவியலாளர் உலகத்தைப் பற்றி மூன்று சொற்களில் சுருக்கிக் கூறுகின்றார். Time Space and Action காலம், இடம், செயல் மூன்றுந்தான் உலகம் என்கிறார்.

**உலோகங்கள்**

உலோகங்கள் ஐந்து வகைப்படும். அவையாவன, பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் என்றும், அவற்றின் இயல்புகள் பற்றியும், அவை எந்தெந்த நாடுகளில் கிடைக்கின்றன என்றும் நாவலர் பாலபாடத்தில் குறிப்பிடுகிறார். "கலப்பில்லாத பொன் நெருப்பிற் சீக்கிரம் உருகாது. கலப்புள்ளது சீக்கிரம் உருகும். கலப்புப் பொன்னைக் காய்ச்சக் காய்ச்ச நிறைகுறைந்து மாற்று ஏறும்" (நாவலர், பாலபாடம், 130) என்று பொன்னின் இயல்புகளை விளக்குகின்றார்.

வெள்ளி எவ்வாறு உண்டாக்கப்படுகிறது என்ற கருத்தினையும் நாவலர் முன்வைத்துள்ளார். வெள்ளி கனிகளில் வெட்டி எடுக்கப்படுகிறது. எடுக்கும்போது ஈயம் முதலானவைகளோடு கலந்திருக்கும் உலையில் வைத்து உருக்கி, ரசத்தோடு சேர்த்து அரைத்துத் திரும்ப உருக்கினால், ரசம் புகைந்து போகச் சுத்த வெள்ளி தேறும். சுத்த வெள்ளியில் களிம்பு படியாது. பொன்னைப்போல வெள்ளியையும் மிக மெல்லிய தகடாகவும் கம்பியாகவும் செய்யலாம். (பாலபாடம், 131) என்று அதன் பயன்பாட்டினை அறிவியல் நோக்கில் பார்க்கிறார். வெள்ளியினால் நாணயங்கள் சில ஆபரணங்கள் செய்யப்படுகின்றன. வெள்ளியினால் சரிகையும் செய்கிறார்கள். வெள்ளியினால் இலங்கை, இந்தியாவில் நாணயங்கள் செய்யப்பட்டன. அவை எந்தெந்த நாடுகளில் கிடைக்கின்றன என்ற செய்திகளையும் தந்துள்ளார்.

செம்பு சிவப்பு நிறமுள்ள உலோகம். அதில் அதிகம் களிம்பு உள்ளது. களிம்பு விசத்தன்மையுள்ளது. அதற்குத் துருசு என்று பெயர். செம்பிற்குத் தாமிரம் என்று பெயர். செம்பினால் அதிகமாகப் பாத்திரங்களும், நாணயங்களும் செய்யப்பயன் பட்டன என்ற அறிவியல் சிந்தனையை நாவலர் பதிவுசெய்துள்ளார். ஈயம் மங்கலான வெண்மை நிறமுள்ள உலோகம். ஈயம் கனிகளிலிருந்து வெட்டி எடுக்கப்படுகின்றது. பெரும்பாலும் கந்தகத்தோடும், சிறபான்மை சொற்ப வெள்ளியோடும் கலந்திருக்கும் என ஈயத்தின் உருவாக்கம் பற்றி நாவலர் குறிப்பிடுவார். இரண்டு பங்கு செம்பும், ஒரு பங்கு நாகமும் சேர்த்து உண்டாக்குவது பித்தளை. பித்தளையினாற் பாத்திரங்களும்

குத்து விளக்குக்களும் செய்யப்படுகின்றன என்கிறார்.

"இரும்பு மற்றைய உலோகங்களிலும் பார்க்க, உறுதியும் உபயோகமும் உள்ளது. அது காந்தத்தினால் இழக்கப்படும் இயல்புடையது. இரும்போடு மிகச் சொற்பமான நிலக்கரி சேர்த்து உருக்கினால் அது உருக்காகும். இரும்போடு அதிக நிலக்கரி சேர்த்து உருக்கினால் அது தண்டவாளமாகும்" (பாலபாடம், 133) என்று அவற்றின் பயன்பாடு பற்றி விளக்குகின்றார். அறிவியல் வளர்ந்திருக்கும் இந்நாளில் உலோகங்கள் பற்றிப் பலர் ஆய்வுகளை நடாத்தி வருகின்றனர். உலோகங்கள் பற்றிச் சித்த வைத்தியர்களும், தொல்பொருள் அகழ்வாராய்ச்சியாளர்களும் பல அறிவியல் சிந்தனைகளைப் பரப்புரை செய்துள்ளனர். பழங்காலத்தில் உலோகங்களை வைத்துச் சித்தர்கள் பல அதிசயங்களைச் செய்து வந்துள்ளனர். "தங்கபஸ்பம்" என்ற மருந்தினைத் தீராத நோய்களுக்கு, இலங்கைச் சித்த வைத்தியர்கள் பழங்காலங்களில் கொடுத்துள்ளதை நாம் அறிவோம். இவ்வாறு உலோகங்கள் மருத்துவத்திற்கு பயன்பட்டுள்ளன. "ரசவாதகலை" தமிழர்களின் பாரம்பரியத்தை உணர்த்துவது. உலோகங்களைப் பிற உலோகங்களுடன் கலந்து கோயில் சிற்பங்களைத் தமிழர்கள் ஈழத்திலும், இந்தியாவிலும் செய்து வருவதைக் காண்கின்றோம். அகழ்வாராச்சியில் தமிழர்களின் தொன்மையை அடையாளப்படுத்தும் விதமாக உலோகங்கள் எடுக்கப்பட்டுள்ளன. பொன் தகடுகள், செப்புத் தகடுகள், நாணயங்கள், ஆபரணங்கள், மணிகள் என்ற உலோகத்தால் செய்யப்பட்ட ஆதாரங்கள் தமிழர்களின் பாரம்பரியத்தையும் அவர்களின் பண்பாட்டு இருப்பையும் அடையாளப்படுத்து கின்றன. சங்க இலக்கியங்களிலும் உலோகங்களின் பயன்பாட்டினை அறியலாம். அதன் முக்கியத்துவம் கருதியே நாவலரும் உலோக அறிவியற் சிந்தனைகளைத் தன் பாலபாட நூலில் பதிவுசெய்துள்ளார்.

### உடல் ஆரோக்கியம்

சரீரத்தை எவ்வாறு சௌபாக்கியமாக வைத்திருப்பதென நாவலர் பெருமான் குறிப்பிடுகிறார். அறிந்தும் அறியாமலும் உடலுக்கு அசௌக்கியம் ஏற்படுகிறது. உணவு எவ்வாறு உண்ணவேண்டும். உணவு சீரணமாக முன் உண்ணலாகாது என்ற உணவு நடைமுறை ஒழுக்கத்தைப் போதிக்கிறார் நாவலர். இருக்கும் வீடுகளுக்குப் பக்கத்தில் நல்ல விருட்சங்களையும், செடிகளையும் வைத்து உண்டாக்குதல், குழிகளில் இலைகள் உதிர்தழுகுதல், நீர் வற்றிச் சேறாகுதல், படுக்கை அறை சனநெருக்கம் இல்லாதிருத்தல், அசுத்தவாயு அணுகாது பாதுகாத்தல் எனச்சுற்றுப்புறச் சூழல் தொடர்பான பேணுகையைக் குறிப்பிடுகின்றார். அப்பியாசம் செய்யாத தேகம், இரத்தம், கெட்டு பழுதுபடும் என்கிறார். உடல் ஆரோக்கியத்திற்கு உணவு, உடற்பயிற்சி, சுற்றுப்புறச் சூழல் அவசியம் பற்றி நாவலர் அறிவியல் நோக்குடன் பேசுகிறார். இன்று யோகப் பயிற்சி பற்றி பலரும் பலவாறு கற்றும், கற்பித்தும் வருகின்றதை நோக்கலாம். மனதை ஒருமுகப்படுத்தினால் உடலில் உள்ள நரம்புகளெல்லாம் புத்துணர்ச்சியுடன் காணப்படும். மூளை வளர்ச்சியடையும் நோய் வராமலும் பாதுகாக்க முடியும் என்கிறார். திருவள்ளுவரும்,

"மருந்துஎன வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது

அற்றது போற்றி உணின்" (திருக்குறள்) என்று உணவு உட்கொள்ளும் முறையை விளக்குகின்றார். முன்பு உண்ட உணவானது, செமிபாடடைந்த பின்பு ஏனைய உணவுகளை உண்ணலாம் என்கிறார். அவ்வாறு உண்டால் மருந்து தேவையில்லையென்றும் கூறுவது இங்கு நோக்கத்தக்கது.

கல்விச் சிந்தனை

ஆறுமுகநாவலர் கல்வி பற்றியும், பெண்கள் கல்வி பற்றியும் பல உயர்ந்த கருத்துக்களைத் தாம் பெற்ற அனுபவங்களின் வாயிலாகக் குறிப்பிடுகின்றார். "மானிடரின் அறிவை விருத்தி செய்வதற்கு முக்கிய கருவியாக உள்ளது கல்வி. அக்கல்வியினால் அன்றி மற்றொன்றினாலும் அறிவு விருத்தியாக மாட்டாது. கல்வி இல்லாவிடின் செல்வம், கீர்த்தி, சரீரசுகம், ஆன்மசுகம் முதலியவற்றை ஒருவரும் அடையமாட்டார்" (ஆறுமுகநாவலர், 2006: ப.92) எனக் கல்வியின் முக்கியத்துவத்தை முன்வைக்கிறார். கல்வி அழியாதது. அக்கினி, நீர், பங்காளிகள், கள்வர், வலியர் என்பவற்றால் அழியாதது. சங்ககாலச் சான்றோர் கல்வி பற்றிக் கூறிய கருத்துக்களையும், திருவள்ளுவர் திருக்குறளில் கூடிய கருத்துக்களையும் உள்வாங்கித் தன் கருத்துக்களை நாவலர் பதிவுசெய்திருக்கிறார். கணியன் பூங்குன்றனார், அரசனுக்குத் தன் தேசத்தில் மட்டுமே சிறப்பு, கற்றவனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு எனக் கூறுவதைப் புறநானூற்றுப் பாடலில் காணலாம்.

ஆறுமுகநாவலர், கற்றவனுக்குச் சென்ற தேசமெல்லாம் சிறப்புச் செய்வது கல்வி என்கிறார். நாவலர், கல்வி ஒருவனுக்கு நன்மை தீமைகளை உணர்த்துதலாற், கண்ணையும் இன்பத்தைக் கொடுத்தலால் மனைவியையும் ஒக்கும் என்பார். இதனைத் திருவள்ளுவர், கல்வியறிவுடையர் கண்ணுடையார் என்றும் கல்வியறிவில்லாதவர் புண்ணுடையார் என்றும் கூறுகிறார். கல்வி மற்றவர்களுக்குக் கொடுக்கும் தோறும் வளரும் என்பது உண்மையாகும். நாவலர்,

"மணற்கேணியைத் தோண்டும் தோறும், ஊற்று நீர் சுரந்து பெருகிக்கொண்டே வருதல்போலக் கல்வியைக் கற்கும் தோறும், அறிவு வளர்ந்து கொண்டே வரும்" என்கிறார். "கல்வியானது இப்பிறப்பிலன்றி மற்றைய பிறப்புக்களிலும் சென்று உதவும். வித்தியதானத்துக்குச் சமமான தருமம் யாதொன்றும் இல்லை. தாம் கற்ற கல்வியை நன்மாணாக்கர்களுக்குக் கருணையோடு கற்பியாதவர் காட்டிலே நச்சு மரமாவர்" (நாவலர், நான்காம் புத்தகம், ப.169) என்று கல்வியின் சிறப்பினையும், கற்றவர்களின் சிறப்பினையும் கூறுகின்றார்.

கல்வியை ஆடவர்கள் அன்றிப் பெண்களும் கற்க வேண்டியது அவசியம் என்கிறார். "வீண்பொழுது போக்காமலும், மற்றவர்களோடு வீண்பேச்சுக்கள் பேசிச் சண்டையிட்டுக் கொள்ளாமலும், நல்ல கதைகளையும், நீதி நூல்களையும் வாசிக்கச் செய்து பெண்களுக்கு நல்லறிவையும், நீதியையும் உண்டாக்குவது கல்வி" என்று பெண்கல்வியின் நோக்கத்தைக் நாவலர் குறிப்பிடுகின்றார். (நாவலர். ப.96). பெண்கள் கல்வியறிவு பெற்றால் மற்றவர்களை வழிநடத்த முடியும் என்ற சிந்தனையையும் முன்வைக்கிறார். பெண் கல்வி, சமுதாயம் மறுமலர்ச்சி ஏற்பட வழிவகுக்கும் என்ற

கருத்தியலைக் காட்டுகின்றார். குடும்பத்தைச் செயல்படுத்த, உலகத்தைப் பேணிக் காக்க, உலகம் மேம்பாடு அடைய, பொருளாதார நிலை மேம்பாடுபெற, பெண்கல்வி அவசியம் என்ற கருத்தியலை நாவலர் முன்வைக்கிறார். சங்ககாலத்துப் பெண்களுக்குக் கல்வியில் முழு உரிமை வழங்கப்பட்டது. அக்காலத்திலேயே ஔவையார், காக்கைப் பாடினியார், பொன்முடியார், பெருங்கோப்பெண்டு முதலானோர் கல்வியில் சிறந்து விளங்கினர். இடைக்காலத்தில் பெண்கல்வி மறுக்கப்பட்டிருந்தது. பெண்கல்விக்கு முட்டுக்கட்டை இடப்பட்டது. இக்காலகட்டத்தில் மாயூரம் வேதநாயகம், பாரதி, தி.வி.க. பெரியார் போன்றோர் பெண்களின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டனர்.

பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்ட இக்காலகட்டத்திலேதான் நாவலரும் பால் சமத்துவம், கல்வி சமத்துவத்தை முதன்மைப்படுத்தினார். நவீன கருத்தியலை நாவலர் கொண்டிருந்ததை இது காட்டுகின்றது. பிற்காலத்தில் பெண்களை நவீனமயமாக்கும் சிந்தனையின் எழுச்சிதான் பெண்ணியம் என்ற கோட்பாடு உருவாகக் காரணமானது. சமுதாயத்தின் சகல நிலைகளிலும் பெண்கள், விடுதலையைக் கோருவதே பெண்ணியத்தின் அடிப்படையாகும். மார்க்சியவாதப் பெண்ணியம், காலம் காலமாக வந்த பெண்ணின் அடிமைநிலையை மாற்ற முயன்றது. இன்றைய பெண்களின் கல்வித்தகுதி உயர்ந்து கொண்டே வருகிறது. பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு பால் சமத்துவம் பேணப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றது. ஒரு சில பெண்கள், மறைமுகமாக நின்று ஆண்கள் பலரை ஒன்று திரட்டித் தன்னைவிடத் திறமைபெற்ற பெண்களுக்கு எதிராகச் செயற்படுவதையும், தன்காரியங்கள் சித்திபெறச் சோரம்போகும் செயற்பாட்டையும் மேற்கொள்கின்றனர்.

மேலும், மாணவர்களுக்கான பாடவிதானம் எப்படி எழுதப்பட வேண்டும், பின்னூட்டல் எப்படிக் கொடுக்கப்பட வேண்டும் என்ற விடயங்களைப் பாடநூல் களில் நாவலர் குறிப்பிட்டுள்ளார். பின்னூட்டல் என்பது வினாக்களாகவும், குறிப்புரை களாகவும், இலக்கணமாகவும் கொடுக்கப்பட்டுள்ளன.(பாலபாடம், நான்காம் புத்தகம், பக்.305 - 319). இப்பொழுது நாம் எழுதும் கலைத்திட்டத்திற்கு முன்னோடி யாக நாவலரது பாடவிதானம் அமைந்துள்ளமை இங்கு உற்றுநோக்கத் தக்கது.

### மொழிபெயர்ப்பு

நாவலரவர்கள் பைபிளைத் தமிழ்மொழியில் மொழிபெயர்த்தார். அவர் சமயத்தைப் பற்றி எழுதுகின்றபோது வலுக்கவனமாக எழுதவேண்டும் என்று குறிப்பிட்டது இவ்விடத்தில் நோக்க வேண்டும். அவரது ஆங்கிலப் புலமை, தமிழ்ப் புலமை, சமயசமரசப்போக்கு என்பவற்றை இதனூடாக நாம் நோக்கலாம். நாவலர், பீற்றர் பார்சிவல் பாதிரியாரிடம் ஆங்கிலத்தைக் கற்றார். இந்தியாவில் கிறிஸ்த்து அறிஞர்கள் சிலர் பைபிளை தமிழில் மொழிபெயர்த்திருந்தாலும், அக்கிறிஸ்தவர்களின் மொழிபெயர்ப்பை விட ஆறுமுகநாவலரின் மொழிபெயர்ப்பே சிறந்தது எனக் குறிப் பிடப்படுகின்றது. ஆறுமுகநாவலரின் பைபிள் மொழிபெயர்ப்பே மிஷனரிமாரால் அச்சிடப்பட்டது. அவரின் தமிழ்ப்புலமையையும், ஆங்கிலப் புலமையையும் இதனூடாகப் பார்க்கலாம். மொழிபெயர்ப்பு என்றால் என்ன என்பதற்குத்

தொர்காப்பியர்,

"தொகுத்தல் விரித்தல் தொகை விரிமொழிபெயர்த்து

அதர்ப்பட யாத்தலோடு அனைமரபினவே" (தொல். மரபியல். சூ.642) என்கிறார். தொகுத்தல், விரித்தல், தொகை விரித்தல், மொழிபெயர்த்தல் என நான்கு வகையில் ஒன்றாக மொழிபெயர்ப்பு அமைகின்றது என்கிறார். மொழிபெயர்ப்பு, அப்படியே பெயர்த்தல் என்பதைக் குறிக்கின்றது. மொழிபெயர்ப்பு என்றால் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கு ஆறுமுகநாவலரின் பைபிள் மொழிபெயர்ப்பு சான்றாகின்றது.

"மொழிபெயர்ப்புக் கலையிலே ஈழத்தவர் தலைசிறந்தவர் என்பதையும், யாழ்ப்பாணத்தமிழ் செந்தமிழ் என்பதனையும், பைபிள் மொழிபெயர்ப்பு மூலம் நிலைநாட்டி ஈழத்திற்குப் பெரும்புகழ்தேடிக் கொடுத்தது, இவர் செய்த முதற் தொண்டாகும். மகாலிங்கஐயரிடம் மொழிபெயர்ப்பு, பார்வைக்கு ஒப்படைக்கப் பட்டது. அவர் பைபிள் முழுவதனையும் படித்து அதிற் பிழையில்லை என்றும், வசனநடை தெளிவாகச்சிறப்புற அமைந்திருக்கிறதென்றும், அச்சிடுவதற்கு மிகுந்த தகுதியுடையதே என்றும், யாழ்ப்பாணத் தமிழ் செந்தமிழ் என்றும் பாராட்டினார். இந்த அரங்கேற்றத்தின் மூலம் ஈழத்தவர்களுக்குத் தமிழகத்தில் மதிப்பு ஏற்பட்டது" எனப் பேராசிரியர் சு. வித்தியானந்தன் கூறியமை இவ்விடத்தில் நோக்கத்தக்கது. (வித்தியானந்தன். சு, 1969). ஈழத்தவர்கள் ஆங்கிலம், தமிழ் என்பவற்றில் பாண்டித்தியம் பெற்றிருந்ததை இதனூடாக நோக்கலாம். மொழிபெயர்ப்பு என்பது அறிவியல் சிந்தனையைக் காட்டுகின்றது. எனவே நாவலரின் மொழிபெயர்ப்பு என்பது அவரின் அறிவியல் நோக்கத்தினைப் புலனாக்குகின்றது.

### கலைச்சொற்கள்

ஆறுமுகநாவலர், தன் படைப்புக்களில் பல வடமொழிக் கலைச்சொற்களைக் கையாள்கிறார். உதாரணமாக, கலம் (நீர்) , ஈசுரத்துரோகம் (கடவுளுக்குச் செய்யும் துரோகம்), தந்த சுத்தி (பல் விளக்கம்), ஆசுதி (அசுத்தம்), வித்தியாதானம் (கல்வியைக் கொடுக்கும் கொடை), வஸ்திரம் (உடை), ஆஸ்தி (சேமிப்புநிதி), முதுசொம் (முதியோர் சொத்து), சைனம் (பிறப்பு) முதலிய சொற்களைக் கூறலாம். அறிவியல் உலகத்தில் அறிவியல் வளர்ச்சியடையும் நிலையில் அயற்சொற்களைக் கையாள்வதையிட்டு கவலை கொள்ளத் தேவையில்லை என்பதே அறிவியலாளரின் சிந்தனையாகும். ஆறுமுகநாவலரும் இக்கொள்கை உடையவரே என்பது இதன்மூலம் அறியலாம். முதலில் பிற சொற்களைக் கையாண்டு, காலப்போக்கில் அதற்குச் சரியான தமிழைக் கையாளலாம் என்பதே அறிவியலாளரின் கொள்கையாகும். ஆதலால் நாவலரும் பத்திரிகைகளிலும், பாடப்புத்தகங்களிலும் ஆங்கிலம் மற்றும் வடமொழிச் சொற்களைப் பயன்படுத்தியிருக்கிறார். பாடப்புத்தகங்களில் வடமொழிச் சொற்களின் தமிழ்ச் சொற்களை அடைப்புக்குறிக்குள் கொடுத்திருப்பது சிறப்பானதாகும். சூடாமணி நிகண்டு மூலமும் உரையும் ஆறுமுகநாவலரால் பரிசோதிக்கப்பட்டதாகும். இவர் தொகுதிப் பெயர்களைப் பின்வருமாறு பாகுபடுத்தி நோக்குகின்றார்.

தேவர்ப்பெயர்த் தொகுதி, மக்கட்பெயர்த் தொகுதி, விலங்கின் பெயர்த்தொகுதி, மரப்பெயர்த் தொகுதி, இடப்பெயர்த்தொகுதி, பலபொருட் பெயர்த்தொகுதி, பண்பு பற்றிய பெயர்த்தொகுதி, செயல் பற்றிய பெயர்த்தொகுதி, ஒலி பற்றிய பெயர்த்தொகுதி என்று கலைச்சொற்களைப் பாகுபடுத்துகின்றார். உதாரணமாக,

சிங்கத்தின் பெயரை - அரி, அறுகு, கேசரி, பூட்கை, மிருகராசன் என்றும், புலியின் பெயரை - வல்லியம், வெல்லுமா, உழுவை, பாய்மா, வேங்கை, குயவரி, சார்த்தூலம், கொடுவரி என்ற கலைச் சொற்களால் பதிவுசெய்கின்றார். (சூடாமணி நிகண்டு மூலமும் உரையும், 1935 : ப.59). இங்கு அதிகமாக வடமொழிக் கலைச்சொற்களும், தூய தமிழ்ச்சொற்களும் கையாளப்பட்டுள்ளன. இன்றைய காலகட்டத்தில் பல சொற்கள் வழக்கிழந்துள்ளன. அவற்றை நாம் தேவைப்படும்போது நாம் கையாள முனையலாம்.

சைவ சித்தாந்த உண்மைகள்

நாவலர் சிறுவயதிலிருந்தே சமயப்பொறையுடையவராகத் திகழ்ந்ததன் விளைவே இறையுண்மைகளைப் பேசவேண்டியதாயிற்று. பல பாடங்களில் கடவுள், ஆன்மா, குருலிங்க சங்கம், தத்துவாராய்ச்சி பற்றிய சமயச் சிந்தனைகளைப் பரப்பினார். கந்தபுராண வசனம், திருவிளையாடல்புராண வசனம், பெரியபுராண வசனம் என்பன ஆறுமுகநாவலரால் தூயதமிழில் எழுதப்பட்டன. சைவ சித்தாந்த சாஸ்திரங்களை விளக்குவதில் வல்லவராக இருந்தார். சைவ சித்தாந்த உண்மைகள் என்பது அறிவியல் சார்ந்தது. ஆறுமுகநாவலர் கந்தபுராணத்தில், சுக்கிராச்சாரியார் - சூரமன்மனுக்கு உரைப்பதாகக் கூறும் பகுதி குறிப்பிடத்தக்கது.

"வேதாகமங்களும் அவற்றின் சார்பு நூல்களும், பிறவும் அண்டத்தினியற்கையை வெவ்வேறாகச் சொல்லுகின்றன. அவை ஒன்றற்கொன்று மலைவாகுமோ எனின், சிருட்டி பேதம் பல வாமாதலால் அவை மலைவாகா. ஆதலால் அவற்றின் வேறுபாடுகளை நாம் யோசித்து, அறிந்து உனக்கு இந்த சிருட்டியிலிடுகின்ற வியற்கையைச் சொன்னோம்.." எனச் சொல்ல சூரமன்மன் அளவில்லாத மகிழ்ச்சியோடு அறிந்தான் என்று நாவலரது கந்தபுராண வசனம் அறிவியல் நோக்கில் அண்டத்தின் இயல்பினையும், சைவசித்தாந்த உண்மையினையும் விளக்குவதனையும் தெளிந்த நடையில் சொல்வதையும் கண்டு மகிழலாம். (ஆறுமுகநாவலர், கந்தபுராண வசனம், 1981 மறுபதிப்பு : ப.133).

ஆறுமுக நாவலரது சைவசித்தாந்த அறிவினை திருமுருகாற்றுப்படையூடாகத் தரிசிக்க முடியும். திருமுருகாற்றுப் படையில் வரும் "புலம் புரிந்துறையுள் செலவு" என்ற தொடர் தலைசிறந்த தொடராக உள்ளது. அதற்கு உரை கூறும்பாங்கு விதந்து குறிப்பிடத்தக்கது. புலம் என்பது அறிவு. இங்கே மெய்யறிவு என்றும், மெஞ்ஞானம் என்றும் உரை வகுக்கின்றார். புரிந்து என்பது சாதித்து, மெஞ்ஞானத்தைச் சாதித்து (முருகன் சேவடியின்கீழ்) உறையும் ஒழுகலாறே. முருகனிடம் ஆற்றுப் படுத்துவதன் பெறுபேறு வீடுபேறு என்று உரை வகுத்தார். (ஆறுமுகநாவலர், திருமுருகாற்றப்படை, ப.32). நச்சினார்க்கினியாரின் உரையை விட நாவலரின் உரையே பொருத்தமான சைவ சித்தாந்த அறிவியலை விளக்குவதாக அமைந்துள்ளது.

## முடிவுரை

நாவலர் தொலைநோக்குப் பார்வையுடன் சமய, தமிழ்ப் பணிகளை ஆற்றியுள்ளார். தமிழ்மொழியூடாக விஞ்ஞானக் கல்வியைக் கற்க முடியும் என்ற சிந்தனையில், தன் பாடநூல்கள் வாயிலாக இவற்றை அறிவுறுத்தியுள்ளார். இவர் காலனித்துவ ஆட்சியின் கருத்தியல்களில் முரண்பாடுமிக்கவற்றை எதிர்த்தும், அவற்றின் நவீனமயமாக்கலை உள்வாங்கியும் செயற்பட்டார். காலனித்துவ ஆட்சியாளரின் கருத்தியலை உற்று நோக்கி, அந்த நவீனத்துவத்தைத் தான் உள்வாங்கிக்கொண்டு, அவற்றின்மூலம் அறிவியலை நிலைநிறுத்த முயற்சித்தவர். இன்றைய காலத்தில் தொழிநுட்ப வளர்ச்சியின் காரணமாக அறிவியல் தமிழ் வளர்ந்துள்ளது. ஆனால் அறிவியல் வளராத அன்றைய காலத்தில், அறிவியல் சிந்தனைகளை தன் மாணாக்கர்களுக்குப் போதித்துச் சமூக இருப்பைக் கல்வியால் நிலைநிறுத்த முயன்றதன் பயனாகவே, விஞ்ஞானபூர்வமான சிந்தனைகள் நாவலரால் முதன்மைப்படுத்தப்பட்டன. எனவே, ஆறுமுகநாவலரின் பைபிள் மொழிபெயர்ப்பை அடிப்படையாகக் கொண்டு அவரின் மொழிபெயர்ப்புத் திறனை ஆராய்தல். ஒப்பியல் நோக்கில் இவரின் மொழிபெயர்ப்புப் பணியை நோக்குதல். நாவலரின் ஆக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இவரின் கலைச்சொற் கோட்பாடுப் பார்வையை நோக்குதல் முதலிய பல ஆய்வுகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இவ்வாய்வு பரிந்துரை செய்கின்றது.

## பயன்படுத்தப்பட்ட துணை நூல்கள்


சூடாமணிநிகண்டு மூலமும் உரையும் (ஆறுமுகநாவலரவர்களால் பரிசோதிதததது). (1935). வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னை.

ஆறுமுகநாவலர். (1981 மறுபதிப்பு). கந்தபுராண வசனம். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, யாழ்ப்பாணம் - கொழும்பு.

திருத்தொண்டர் பெரியபுராண வசனம், (1953 18ஆம் பதிப்பு). வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னை.

திருமுருகாற்றுப்படை ஆறுமுகநாவலர் உரை. (1971 மறுபதிப்பு). யாழ்ப்பாணக் கூட்டுறவுத்தமிழ் நூற்பதிப்பு விற்பனைக் கழகம், யாழ்ப்பாணம்.

திருவிளையாடல் புராணம் ஆறுமுகநாவலர் உரை. ஆறாம் பதிப்பு. வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னை.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர். (2006 திருத்திய பதிப்பு). பாலபாடம் 1 - 4 ஆம் புத்தகம். தென்றல் பப்ளிகேஷன்ஸ், கொழும்பு.

நாவலர் நூற்றாண்டு மலர். (1979). ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, யாழ்ப்பாணம் - கொழும்பு.

நாவலர் மாநாடு விழாமலர். (1969). ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, யாழ்ப்பாணம் - கொழும்பு.